செ.வெ.எண்.30 நாள்: 23.12.2019

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வரைவு வாக்காளர் வெளியீட்டு நிகழ்ச்சி இன்று (23.12.2019) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்டத்தில் இன்று வரைவு வாக்காளர் பட்டியல் அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிடப்பட்டது. இறுதி வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதத்தில் வெளியிடப்படும். இன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 6,95,726 ஆண்கள், 7,22,407 பெண்கள், இதர 112 நபர்கள் என மொத்தம் 14,18,245 வாக்காளர்கள் உள்ளனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் - 2020 பணியானது 23.12.2019 அன்று முதல் 22.01.2020 வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தங்கள் மேற்கொள்ளுதல், ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்தல் ஆகியவற்றிற்கு விண்ணப்ப படிவங்கள் பெறப்படும். மேலும், 01.01.2020 அன்று 18 வயது நிறைவடைய உள்ளவர்கள் அதாவது 31.12.2001 அன்றோ அல்லது அதற்கு முன்போ பிறந்தவர்கள் வாக்காளர்களாக பதிவு செய்து கொள்ளலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத, 18 வயதிற்கு மேற்பட்டவர்களும் தங்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கலாம்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் - 2020 பணிக்காக சிறப்பு முகாம்கள் 04.01.2020(சனிக்கிழமை), 05.01.2020 (ஞாயிற்றுக்கிழமை), 11.01.2020(சனிக்கிழமை) மற்றும் 12.01.2020 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. மேற்படி சிறப்பு முகாம் நாட்களில் காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி முடிய சம்பந்தப்பட்ட பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் படிவம் 6, 6ஏ, 7, 8 8ஏ உள்ளிட்ட படிவங்களை அளிக்கலாம்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் அனைத்து வாக்குச் சாவடிகளுக்கும் BLA (Booth Level Agents) வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமனம் செய்திருக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் நாள் ஒன்றுக்கு மற்றவர்கள் சார்பாக அதிகபட்சமாக 10 மனுக்கள் அளிக்கலாம். மொத்தத்தில் 23.12.2019 முதல் 22.01.2020 வரை நடைபெறும் சிறப்பு சுருக்க முறைத் திருத்த நாட்களில் முகவர்கள் 30 மனுக்களுக்கு மேல் அளிக்ககூடாது.

பொதுமக்கள் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் மற்றும் சிறப்பு முகாம் வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவும், நீக்கவும், திருத்தங்கள் மேற்கொள்ளவும் மற்றும் ஒரே சட்டமன்ற தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

கூட்டத்தில் தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., தேர்தல் வட்டாட்சியர் திரு.நம்பிராஜன் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகள் திரு.சந்தனம், திரு.ரவி, திரு.அக்னல், திரு.ராஜா, திரு.முத்து, திரு.சிவராமன், திரு.வரதராஜ், திரு.அசோக்குமார், திரு.முரளிதரன், திரு.மாடசாமி, திரு.சுப்பிரமணியன்கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.